என்.எஸ்.எஸ். அதிகாரி ஜி.குமரேஸ்வரலிங்கம்.

தினமணி 2010

ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனைத் திருவிழா

சென்னையை அடுத்த மாடம்பாக்கம் ஸ்ரீ சக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்தி பீட பிருந்தாவனத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழாவில் 'ஸத்குருவும் சக்தி பீடத்தின் மகிமையும்' எனும் நூலை ஆன்மீக சொற்பொழிவாளர் ஸ்ரீ கவி வெளியிட ராதாசர்மா பெற்றுக்கொள்கிறார். உடன் பிரதான சீடர் குருஜி கே.வி.எல்.என். சர்மா, பாடலாசிரியர் மருதபரணி.

தாம்பரம், டிச. 28: சென்னை தாம்பரத்தை அடுத்த மாடம்பாக்கம் தேனு புரீஸ்வரர் திருக்கோயில் அருகில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீ சக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்தி பீட பிருந்தாவனத்தில் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனை விழா செவ்வாய்கிழமை தொடங்கியது.

அதிகாலையில் வேதபாராயணத்துடன் தொடங்கி,கணபதி ஹோமம், கோமாதா பூஜை, ஸ்ரீ சுப்பிரமணிய மூலமந்திர ஹோமம், குலினி துர்கா பூஜை,சுவாசினி பூஜை, கன்யா பூஜை, சௌபாக்ய பூஜை, தங்க பாதுகை பூஜை,ஸ்ரீ தேவி திருக்கல்யாணம்,உமாமகேஸ்வர பூஜை,ஸ்ரீ வித்யா நவாவரண பூஜை உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் தொடர்ந்து நடைபெற்றன.

பிருந்தாவன வளாகத்தில் இலவச மருத்துவ முகாம் மற்றும் அன்னதானம் நடைபெற்றது. மகான் சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஆராதனைத் திருவிழா புதன்கிழமை (டிச 29) நடைபெறுகிறது. விழாவில் பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக கிழக்கு தாம்பரத்தில் இருந்து இலவச வாகன போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது.

ாமதிநாயகத்தின் 'தமிழக பாசன
, 'தமிழகம் தண்ணீர் தாகம்
நூல்கள் வெளியீட்டு விழா: பழ.
ன், வைகோ, தா. பாண்டியன்,
டியராஜன், வி. ஜீவானந்தம் பங்
வநேய பாவாணர் நூலகம், அண்
ல, மாலை 5.

ுயரின் சீனா-நூல் அரங்கம்: தக்
வித்யால வளாகம், 58, வெங்கட்
ர சாலை, தியாகராயநகர், மாலை

இஸ்திரி பெட்டி விழுந்து இளைஞர் சாவு

சென்னை, டிச. 28: இஸ்திரி பெட்டி தலையில் விழுந்து படு காயமுற்றதாலும், மின்சாரம் தாக்கியதாலும் இளைஞர் உயிரிழந்தார்.

வில்லிவாக்கம் வெள்ளாளர் தெருவைச் சேர்ந்தவர் அறமு